**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 351/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.7 |
| Name | : | திரு. ஆரோக்கியராஜ் , சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father's/Husband Name: | | திரு. மரியதாஸ் |
| Village | : | கைகளத்தூர் காவல் நிலையம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1, 2 ஆஜர்.)**

i) நான் தற்போது கைகளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.03.2023ம் தேதி பாடாலூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்த போது துறையூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள் நோயாளியாக சிசிச்சையிலிருந்த தர்மலிங்கம் மனைவி சாந்தி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் தன்மைக்கேற்ப பாடாலூர் காவல் நிலைய மனு இரசீது எண் 113/2023 ஆக பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, விசாரணைக்கு பிறகு பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 78/2023 சட்டப்பிரிவுகள் 294(b),324,506(2) of IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் **பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையினை தவறுதலாக நீதித்துறை நடுவர் எண் II

அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அது குறித்து தனியறிக்கை ஒன்று தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கானது கூடுதல் மகளிர் நீதிமன்றத்திற்கு உட்பட்டது என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன். மேற்படி **தனியறிக்கை அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 23.03.2023ம் தேதி காலை 10 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிரபாகரன், முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சாட்சிகள் சாந்தி, ஈவாமுதன், ரெங்கையா, முருகானந்தம், பிரபாகரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி சந்திரன் என்பவரை டி.களத்தூர் பிரிவு ரோடு பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தவரை 12.30 மணிக்கு கைதிற்கான காரணம் கூறி கைது செய்து அவரின் கைது குறித்து தகவலை அவருடைய உறவினருக்கு தகவல் தெரிவித்து எதிரியை திரேக பரிசோதனை செய்து 13.30 மணிக்கு நிலைய பாராவசம் ஒப்படைத்து அடைப்புக் காவலுக்கு கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு எதிரி தங்கமணி என்பவர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு முன்பிணை பெற்றுள்ளதால் அவரை நான் கைது செய்யவில்லை.

காயம்பட்ட சாந்திக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றை பெற்றேன்.

இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரிகள் இருவர் மீதும் இதச பிரிவுகள் 294(b),324,506(2) of IPC ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 20.03.2023 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதி 23.03.2023 என்றால் சரிதான். துறையூர் மருத்துவமனையிலிருந்து அ.சா.1 சிகிச்சையிலிருந்த தகவல் பெற்ற தேதி 21.03.2023 என்றால் சரிதான். 2 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தற்கான காரணத்தை புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ குறிப்பிடவில்லை

என்றால் சரிதான், சிஎஸ்ஆர் பதிவு செய்து முதல் நிலை விசாரணை செய்ததால் மேற்கண்ட கால தாமதம் ஏற்பட்டது. நான் பதிவு செய்த சிஎஸ்ஆரை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

அ.சா.1யை அடித்ததாகவும், மூங்கில் கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லப்படும் ஆயுதமான மூங்கில் கட்டையை எனது விசாரணையில் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் பொது இடமில்லை என்றாலும் காடு என்றாலும் சரிதான். எதிரிகள் பேசியதாக சொல்லப்படும் ஆபாச வார்த்தைகளால் 3ம் நபர்கள் யாருக்கேனும் தொந்தரவாகவும், அருவருக்கத் தக்கதாகவும் இருந்தது என்பதை எனது விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி ஈவாமுதன் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புகாரில் ஈவாமுதன் சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.3 ரெங்கையா நீதிமன்றத்தில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மருத்துவர் தனது சாட்சியத்தில் தெரிந்த நபர் தான் அடித்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் ஆண் நபர் அடித்ததாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். இறுதி அறிக்கையில் உள்ளது போல் எதிரிகள் ஆபாச வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் எதிரிகள் மூங்கில் குச்சியால் அடிக்கவில்லை என்றாலும் அவ்வாறு அடித்திருந்தால் மேற்கண்ட ஆயுதத்தை நான் எனது விசாரணையில் கைப்பற்றிருப்பேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.